Sub Court, Eraniel                                   O.S.No.25/2020

**10.10.2022**

வா.சா.1 திரு. மேரி ஜான்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை (6ம் பிரதிவாதி தரப்பில்)

சர்வே எண்.109/15ன் மொத்த விஸ்தீரணம் 15 ஏர்ஸ். அதனுடைய பழைய சர்வே எண்.4431. பழைய சர்வே எண்.4431ன் புதிய சர்வே எண்கள். 109/6 முதல் 109/12 மற்றும் 109/15 என்றால் சரிதான். தாவாச் சொத்து முதலில் சவரிமுத்து நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பழைய சர்வே எண்.4431ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 10 சென்ட் என்றால் அது எனக்குத் தெரியாது. 1 முதல் 5 பிரதிவாதிகளின் தாத்தா சபரியானந்த நாடாருக்கு பழைய சர்வே எண்.4431ல் 37 சென்ட் பாத்தியம் என்றால் சரியல்ல. அந்த 37 சென்ட் சபரியானந்த நாடாருக்கு பாகப்பிரிவினையில் கிடைத்தது என்றால் வாய்க்கரால் பாகத்தில் அவருக்கு 4ல் 1 பங்கு கிடைத்தது. நான் சொல்வது தவறு என்றாலும் சபரியானந்த நாடாருக்கு பாகப்பிரிவினையில் 37 சென்ட் கிடைத்தது என்றாலும் சரியல்ல. சபரியானந்த நாடாரின் மகன் பெயர் அம்புரோஸ் என்றால் சரிதான். அந்த அம்புரோஸ் என்பவரின் மகன்கள் தான் 1 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். என் தகப்பனார் செபஸ்டியன் நாடாருக்கு வழக்குப் பட்டிகைச் சொத்தில் 9.25 சென்ட் உரிமை உண்டு என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். பத்திரங்கள் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.14ல் பழைய சர்வே எண்.4431 என்று குறிப்பிடப்படவில்லை. சர்வே எண்.109/15 என்பது தற்சமயம் ஸ்தலத்தில் சர்வே எண்கள்.109/15 ஏ, பி, சி, டி என உட்பிரிவு செய்யப்பட்டு தனித் தனியாக உள்ளது என்றால் அது கள்ளத்தனமாக செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட கண்டங்களைத் தான் 1 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் ஒரு பகுதியைத் தான் அனுபவித்து வருகிறார்கள். 2ம் பிரதிவாதி தனக்கு உரிமைப்பட்டச் சொத்தை 6ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து விட்டார் என்றால் என்னுடைய சொத்தையும் சேர்த்து எழுதிக் கொடுத்துள்ளார். என்னுடைய தகப்பனாரின் கல்லறை இருக்கும் பகுதி தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.109/15 டி என்று உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9ல் ரீசர்வே எண்.109/15 டி என்று உட்பிரிவு செய்யப்பட்டு கூறப்பட்டுள்ளது என்றால் அது கள்ளத்தனமாக ஏற்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த சொத்து ரீசர்வே எண்.109/15 சி என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது கள்ளத்தனமாக ஏற்பட்டுள்ளது. வா.சா.ஆ.6ல் மொத்தம் 13 நபர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் குறிப்பிடப்பட்டுள்ள டேவிட், பால்தங்கம் ஆகியோரை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் அவர்களுடைய சொத்தை தனியாக 4ல் 1 பங்கு பிரித்து அனுபவித்து

வருகிறார்கள். அதனால் அவர்கள் இந்த வழக்கிற்கு தேவையில்லை. எனக்கு சர்வே எண்.109/15 ல் எந்த உரிமையும் இல்லை என்பதால் தான் உட்பிரிவு செய்யும் போது என்னை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியிடமிருந்து 6 ம் பிரதிவாதி விலைக்கு வாங்கிய சொத்தில் நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும் வழக்கு பட்டிகை சொத்திற்கும் இடையில் 200 மீட்டர் தூரம் இருக்கும். 2 ம் பிரதிவாதியிடமிருந்து 6 ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்தில் வீடு கட்டி காம்பவுண்ட் சுவர் எழுப்பி அனுபவித்து வருகிறார் என்றால் நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு கொரோனா காலக்கட்டத்தில் கட்டிடம் கட்டி விட்டார். நான் 6 ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ய மூலகாரணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. தேவையான நபர்களை நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கை 6 ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என்
முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.